அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண்: 45 /2017
தேதி: 30.03.2017

**விவசாயிகளின் துயரங்களுக்கு**
**மத்திய அரசு உடனடியாக கவனம் செலுத்தவேண்டும்.**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை.**

வறட்சி நிவாரணம், விவசாய கடன் தள்ளுபடி நிவாரணங்கள், காவிரி மேலாண்மை வாரியம், நதி நீர் மேலாண்மை கொள்கைகள் என அனைத்திலும் மத்திய அரசு தமிழக விவசாயிகளின் நியாயமான கோரிக்கைகளுக்கு செவி சாய்க்கவில்லை.

16 நாட்களை தாண்டியும் தலைநகரிலேயே தமிழக விவசாயிகள் போராட்டம் நடத்திவருகிறார்கள். இது குறித்து பிரதம அமைச்சரும் மத்திய அரசாங்கமும் அவர்களின் கோரிக்கைகளுக்கு எந்த ஒரு துரித நடவடிக்கையும் எடுக்காதது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. தமிழக விவசாயிகள் கடந்த சில வருடங்களாக சந்தித்து வரும் துயரங்கள் குறித்து பல முறை முறையிட்டும் எந்த ஒரு தீர்வும் ஏற்படாத நிலைமை தொடர்வது போராட்டங்கள் பலவற்றிற்கு காரணமாக அமையலாம். பல இடங்களில், பல காரணங்களுக்காக முடிவு இல்லாத போராட்டங்கள் தொடர்வதும், அரசாங்கத்தின் நியாயமான நடவடிக்கைகள் தொடராமல் இருப்பதும் ஜனநாயகத்தின் மேல் இருக்கும் நம்பிக்கையை வலுவிழக்கும் செயலாக மாறக்கூடாது என்பது எனது கருத்து. மேலும் பல தற்கொலைகளுக்கு காரணமான விவசாயிகளின் துயரங்களுக்கு மருந்து அளிக்கும் விதமாக மத்திய அரசு மும்முரமாக செயல்பட்டு தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

தமிழக விவசாயிகளின் போராட்டத்தை மற்ற மாநிலத்தில் உள்ள விவசாயிகளும் கவனித்து வருகின்றனர். அவர்களுக்கு விவசாயத்தை காப்பாற்ற ஊக்கம் வரவேண்டுமெனில் மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றும் இந்தியாவின் முதுகெலும்பு கிராமங்கள்; கிராமங்களின் அடிப்படை ஆதாரம் விவசாயம்; அதற்கு தேவை சரியான முறையில் வடிவமைக்க பட்ட நீர்நிலை மேலாண்மை. இந்தியாவில் உள்ள ஒட்டு மொத்த விவசாயிகளுக்கும், நம்பிக்கையும் ஊக்கமும் அளிக்கும் வகையில் மத்திய அரசின் செயல்பாடுகள் இருக்கவேண்டும் என்று என் சார்பிலும் சமத்துவ மக்கள் கட்சி சார்பிலும் கேட்டு கொள்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ஆர் சரத்குமார்**
நிறுவனர் - தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com